

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், தமிழ்நாட்டிலிருந்து உலகத் தரத்தில் விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் ஓய்வில்லாது உழைக்கும், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுதந்திர தினத்தை முன்னிட்டு, கரூர் தொகுதி, மருத்துவர் நகர் கிளைக் கழகம் மற்றும் வெங்கட்ராமன் கபடிக் குழு இணைந்து நடத்திய முதலாம் ஆண்டு கபடி போட்டியை கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செப்டம்பர் 2025, இரண்டாவது வாரத்தில் வருகை புரிவதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் , ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது!

# தி.மு.க. பெரம்பலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்- எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஆக. 20 - தி.மு.க. பெரம்பலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், பொதுக்குழு உறுப்பினர் டி.கே.ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ்.ஜாகிர்உசேன் அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், முன்னாள் பேரூர் கழக செயலாளர் ரமேஷ்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர் மா.பிரபாகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ. சுந்தர்ராஜ்,

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி.ரவி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முழக்கத்துடன் தொடங்கிய புதிய உறுப்பினர்கள் சேர்க்கை பணியை திறம்பட செயலாற்றி நமது மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் 1,41,018 உறுப்பினர்களும்,

குன்னம் சட்டமன்ற தொகுதியில் 1,40,311 உறுப்பினர்களும் சேர்ப்பதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் இந்த செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது,

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி கழக உயிர் நாளங்களான அனைத்து கழக கிளை களிலும் உடனடியாக கிளைக் கழக பொதுக்குழு கூட்டங்களை நடத்தி மினிட் நோட்டுகளில் பதிவிட்டு, தீர்மானங்களை இயற்றி, மினிட் நோட்டுகளை ஒன்றிய, மாவட்ட கழகங்களின் வழியாக தலைமை கழகத்திடம் ஒப்படைக்க வேண்டுமாறு அனைத்து கழக நிர்வாகிகளையும் இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியாக விளங்கிவரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., அவர்களுடைய சிற்றன்னை திருமதி செல்லம்மாள் மறைவிற்கும், பெரம்பலூர் நகரம், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி அரனாரை ஜெயக்குமார் சித்தப்பா மு.கருணாநிதி மறைவிற்கும், பெரம்பலூர் ஒன்றியம, பொம்மனப்பாடி முன்னாள் கிளைக் கழக செயலாளர் கருணாநிதி மறைவிற்கும், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் வெள்ளுவாடி கிளைக் கழக செயலாளர் வரதராஜன் மனைவி பூங்காவனம் மறைவிற்கும், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் வி.களத்தூர் கிளைக் கழக இளைஞரணி அமைப்பாளர் முகமது நிஷார் மறைவிற்கும், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் மதியழகன் தாயார் காசாம்பு மறைவிற்கும், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கொளக்காநத்தம் ஊராட்சி தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவரும் , ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளருமான நல்லாசிரியர் கண்ணையன் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### ஒன்றிய அரசு கல்விக்காக செலுத்த வேண்டிய ரூ.2,291 கோடி நிலுவைத் தொகையை விடுவிக்க

# தமிழக அரசிடம் இருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளதா?

## மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதுடெல்லி, ஆக. 20 - கல்வி நிதியான ரூ.500 கோடியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை என்பது உண்மையா? ஒன்றிய தமிழக அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.2,291 கோடி நிலுவையில் உள்ள கல்வி நிதியை மாநிலத்திற்கு விடுவிக்க தமிழக அரசிடம் இருந்து ஏதேனும் கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளதா என்பதும் உண்மையா, மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய கல்வி அமைச்சர் ஸ்ரீ ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில் வருமாறு : மத்திய நிதியுதவித் திட்டம் சமாக்ரா ஷிக்ஷாவின் கீழ், திட்ட ஒப்புதல் வாரியத்தால் (PAB) அந்தந்த ஆண்டு வேலைத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களின் (AWP&Bs) ஒப்புதலின் அடிப்படையில், மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிதிப் பகிர்வு முறையின்படி, தமிழ்நாடு உட்பட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மத்தியப் பங்கின் வெளியீடு, பயன்பாட்டுச் சான்றிதழ்களின் சமர்ப்பிப்பு, முன்னர் வெளியிடப்பட்ட நிதி தொடர்பான தணிக்கை அறிக்கைகள், உடல் மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகள், மாநில பங்களிப்புகள் மற்றும் திட்ட விதிமுறைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றைப் பொறுத்தது. இந்தத் திட்டம் இப்போது தேசியக் கல்விக் கொள்கை, 2020 உடன் முழுமையாக இணைக்கப் பட்டுள்ளது. எனவே, சமக்ரா சிக்ஷாவைச் செயல்படுத்துவது NEP, 2020ஐச் செயல்படுத்துவதற்கு ஒப்பானது. இருப்பினும், தமிழ்நாடு அரசு தனது சொந்த தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை, 2025ஐக் கொண்டு வரும்போது, NEP, 2020ஐ முழுமையாகச் செயல்படுத்த ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறினார்.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், தாட்கோ சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மை பணியாளர்களின் குடும்பத்தினருக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளை தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி , அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் வழங்கி, குழு புகைப்படம் எடுத்து கொண்டார். உடன் உதகை நகரமன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், தாட்கோ மாவட்ட மேலாளர் செல்வி ஆர்னி பேர்ள் உட்பட பலர் உள்ளனர்.

### திராவிட மாடல் அரசின் திட்டங்களால் நீலகிரி மலைவாழ் மக்கள் பெருமிதம்

# என்றும் எங்களோடு முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.இராமச்சந்திரன் அறிக்கை!



தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் சந்திக்கும் பகுதியான எங்கள் மலைப்பகுதியில் என்றென்றும் அங்குள்ள மலைவாழ் மக்களின் மனதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைந்து இருக்கிறார் என்றால் அது எந்த வகையிலும் மிகையல்ல. பசுமை மிகு நீல மலைகள் என்று அழைக்கப்படும் எங்கள் நீலகிரியில் மக்களின் மனதில் பசுமரத்தாணி போல் இருப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் சார்பில் என்னென்ன திட்டங்கள் எப்போதெல்லாம் அறிமுகம் செய்யப்படுகிறதோ, அப்போதெல்லாம் அந்தந்த திட்டங்கள் இந்த நீலகிரி மலைப் பகுதியில் உடனுக்குடன் செயலாக்கம் பெறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். மாநிலத்திலேயே அதிக அளவில் கடும் மழை பெய்து வரும் பகுதி எங்கள் நீலகிரி மலை, அப்படிப்பட்ட நீலகிரியில் எங்கும் வெள்ளம் ஆயினும், தமிழக அரசின் தலைசிறந்த திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நடைபெறும் பொழுதெல்லாம் சிரமங்களை பார்க்காமல் மலைவாழ் மக்கள் நேரடியாக வந்து குவிவதை பார்க்கும் பொழுது மனதிற்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது

கடந்த 28 நாட்களாக நீலகிரி மாவட்டம் முழுவதும் ‘உங்கள் ஸ்டாலின் திட்டம்’ நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தாயுமானவர் திட்டம் என அரசின் திட்டங்கள் ஆங்காங்கே முகாமில் நடைபெறுகின்றன.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை எடுத்துக் கொண்டால் குன்னூர் ஜெயின் மண்டபம் பிக்கோள், ஜெகதலா, சோழடா மட்டம் மவுண்ட் ப்ளசென்ட் பேரெட்டி தூதர் மட்டம் அரவேணு , அரக்காடு கோடநாடு கோத்தகிரி குழித்துறை , பேட் போர்ட், அரவேணு ஆறு குறிச்சி உள்ளிட்ட இடங்கள் கோத்தகிரி நகராட்சி பால கிழவா நெடு குலா பெஸ்ட் குரூப் பார்லியர் பேட் போர்ட் பெட்டட் டீ, சுகுழா, கோத்தகிரி ஒ.எம்.சி. ஹால் பிக்கெட்டீ உள்ளிட்ட இடங்களில் 15 நாட்களாக இத் திட்டம் தொடர்பாக கூட்டம் நடைபெற்ற போது மலைவாழ் மக்கள் திரண்டு வந்து தங்களின் ஆதரவை தெரிவித்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அதேபோல் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தொடர்பாக கோத்தகிரி, முத்தோரை, ஒக்கலிகர், மேல் பாரத் நகர், கோத்தகிரி காந்தி மைதானம், பெள்ளட்டி மட்டம் மற்றும் குண்டாட, கள்ள கோரை, தலைக்குந்தா உள்ளிட்ட இடங்களில் நிகழ்ச்சி நடைபெற்ற போதும் அதிகாரிகளை சுற்றி அத்திட்டம் தொடர்பாக கேட்க வழிந்த கூட்டம் சொல்லி மாளாது.

அது மட்டுமல்ல சமீபத்தில் தொடங்கப்பட்ட ‘தாயுமானவர் திட்டத்தை’ எடுத்துக் கொண்டால், உதகை புது மந்து , ஆனந்தகிரி, ஒ.என்.சி. மண்டபம் , வசம் பள்ளம் குன்னூர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் திரண்ட மலைவாசி மக்களை காணும் பொழுது, இந்த அரசு திட்டங்களில் மேல் – இன்னும் சொல்லப்போனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் மேல் அவர்களுக்கு தான் எவ்வளவு பாசம், நேசம், பரிவு என்பதை அறிய முடிந்தது. அரசின் திட்டங்கள் அத்தனையுமே மிக மிக முக்கியமானதாக வாழ்க்கைக்கு தேவையானதாக இருக்கின்றன என்பதை அவர்களால் உணர முடிந்தது.

எங்கு நோக்கினும் மேகம் சூழ்ந்த நிலை இருக்கும் எங்கள் நீலகிரியில் இந்த அரசின் மீது தான் எவ்வளவு நம்பிக்கை. வெறும் அறிவிப்புகளை மட்டும் வெளியிடாமல் அறிவித்த அத்தனை நலன் காக்கும் திட்டங்களையும் உடனடியாக செயல்படுத்தும் அற்புதங்களையும் இந்த தமிழ்நாடு கண்டு மகிழ்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

அதுவும் மலை பிரதேசமான எங்கள் நீலகிரியில் கடுமையான மழை காலங்களிலும் அரசின் திட்டங்களை அறிந்து கொள்ள புரிந்து கொள்ள தெரிந்து கொள்ள சிரமங்களை பாராமல் தங்கள் பகுதிக்கு பக்கத்தில் நடைபெறும் திட்ட முகாம்களுக்கு விரைந்து வந்து பலன் பெற்றாக வேண்டும் என்கின்ற மலைவாழ் மக்களின் ஆர்வத்தை குறைத்துச் சொல்லிவிட முடியாது.

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் மலைவாழ் பகுதியில் 27 இடங்களிலும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம் ஒன்பது இடங்களிலும் ‘தாயுமானவர் திட்டம்’ நான்கு இடங்களிலும் என மொத்தம் 40 இடங்களில் முகாம்கள் மூலம் திட்டங்கள் அறிமுகம் செய்த போது அதில் வந்து கலந்து கொண்டு பலன் அடைந்தவர்கள் ஏராளம் ஏராளம்.

இது நாள் வரை பிரச்சினைகளிலே உழன்று கொண்டிருந்த மக்கள் அதிலும் குறிப்பாக கடைக்கோடி மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் உள்ளவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு விடிவு வராதா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டும் விதமாக இந்த திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து அந்தத் திட்டங்களை முறைப்படி செயல்படுத்தி வருவது கண்டு அவர்கள் முகத்தில் முகத்தில் தெரிகின்ற மகிழ்ச்சியை என்னவென்று சொல்வது.

ஒவ்வொரு முகாம்களிலும் அரசு அதிகாரிகளோடும் கழக முன்னணியினரோடும் சென்று கலந்து கொண்டு அவர்களுக்குத் திட்டத்தை எடுத்துரைக்கும் போது தளபதியை வாழ்த்தாத மக்களே இல்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்பட்டு அது செயல்முறைக்கு வரும்பொழுது அதனால் பலன் அடைபவர்கள் பற்றி அறியும் போது மனதுக்குள் தோன்றும் மகிழ்ச்சி தான் என்னே.

பரவலாக கடும்மழை ‘ஆங்காங்கு நிலச்சரிவு’ சாலைகளில் வெள்ளம் என நிலைமை இருக்கும் பொழுது இது போன்ற திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நடைபெறும் பொழுது அங்கு சிரமம் பாராமல் வந்து குவியும் மலைவாசிகளை நேரே பார்க்கும் பொழுதும் , அவர்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியை நோக்கும் போதும் ஆகா இந்த அரசு முறையாகத்தான் எந்தவித பாகுபாடும் இன்றி எல்லோருக்கும் எல்லாம் என்கின்ற நிலையில் செயல்பட்டு வருவதை அறிய முடிகிறது.

இந்த திராவிட மாடல், ஆட்சியில் ஏற்கனவே முதல்வர் தளபதி அவர்கள் சொல்லுவார்கள், வாக்களித்தவர்களுக்காக மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பார் அது எவ்வளவு உண்மை இந்த் திட்ட அறிமுகக் கூட்டங்களில் வந்து பங்கேற்று பலன் அடைபவர்கள் தி.மு.க.வினர் மட்டும் அல்ல, மாற்றுக் கட்சியினரும் வருகின்றனர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திற்கு அரசின் திட்டங்கள் தொடர்பாக செல்லும் பொழுது பல்வேறு சிரமங்களை அனுபவித்தாலும் அங்கு கூடும் மக்களின் முகத்தில் எழும் மலர்ச்சியை பார்க்கும் பொழுது அந்த சிரமம் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் பறந்து விடும். நாம் சற்று ஓய்ந்தாலும் கூட முதல்வர் அவர்கள் அவ்வப்போது தொடர்பு கொண்டு அரசின் திட்டங்கள் மக்களிடம் கொண்டு சேர்ப்பிக்கப்படுகிறதா என்று வினவும் பொழுது அவருடைய ஆர்வத்தை அறிந்து செயல்பட வேண்டி இருக்கிறது

கடந்த ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன அவைகளில் பெரும்பாலான திட்டங்கள் வெறும் அறிவிப்போடு மட்டும் இருந்து விட்டன. அதனால் தான் எங்கள் மலைவாழ் மக்கள் சொல்லொனா துயருக்கு ஆளானார்கள்.

னால் இந்த தளபதி ஆட்சியிலோ அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் உடனுக்குடன் செயல்பாட்டுக்கு வருவதால் மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிவதை அவர்கள் பேசுவதில் இருந்தே அறிய முடிகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் மனதில் கொண்டு, எங்கள் மலைவாசிகள் பேசும் பொழுது ‘என்றென்றும் எங்களுடன் மு.க.ஸ்டாலின்’ என்று பெருமிதத்துடன் கூறுவதை கேட்க முடிகிறது

உண்மையும் அதுதான். மக்களுக்கான திட்டங்கள் அறிவிக்கப்படும் பொழுது அதேசமயம் அது செயல்பாட்டிற்கு வரும் பொழுது மக்கள் மகிழ்ச்சி அடையத் தானே செய்வார்கள்.

ஜூலை 15 முதல் ஆக. 12 வரையிலான 28 நாட்கள் நடைபெற்ற திட்டங்கள் தொடர்பான முகாம்கள் தொகுப்பே இதுவாகும். அதற்கு முன்னரும் சரி பின்னரும் சரி எங்கள் நீலகிரி மாவட்ட மக்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தங்கள் நெஞ்சில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல என்று தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.இராமச்சந்திரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 101 ஊராட்சிகளில் 101 நாட்களுக்கு விடியல் விருந்து உணவு வழங்கும் நிகழ்ச்சி கழக மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் ரகு அண்ணாமலை ஒருங்கிணைப்பில் 75வது நாளாக திருமயம் சட்டமன்ற தொகுதி பொன்னமராவதி தெற்கு ஒன்றியம் தொட்டியம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற அன்னம் தரும் அன்புக்கரம் விடியல் விருந்து உணவு வழங்கும் நிகழ்ச்சியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் , கனிம வளங்கள் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்துகொண்டு 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு காலை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அரு.வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.